**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009**
**Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

# அடியேன் செய்யும் விண்ணப்பம்

(ஸ்ரீவைகானஸ ஆகம ரத்னாகர: &ஆசார்ய:, ஸ்ரீவைகானஸ யசோ பூஷணம், அம்மங்குடி வி.ஸ்ரீனிவாசபட்டாச்சாரியார், தலைமை அர்ச்சகம், ஸ்ரீனிவாஸப்பெருமாள் ஸன்னதி, சிங்கப்பூர்)

ச்ரௌதஸ்மார்த்தாதிகம் கர்ம நிகிலம் யேன ஸூத்ரிதம்
தஸ்மை ஸமஸ்த வேதார்த்த விதே விகனஸே நம:
ச்ருதிஸ்ம்ருதி நதீ பூர்ணம் சாஸ்த்ர கல்லோல ஸங்குலம்
விஷ்ணுபக்த்யுதகம் சுத்தம் வந்தே ஸ்ரீவிகனோர்ணவம்.

ஸ்ரீய: பதியான பகவான் ஸ்ரீமன்நாராயணன் எண்ணற்ற அவதாரங்களை எடுத்தார். அதில் முக்கியமான பத்து அவதாரங்களை மட்டும் ஞாபகத்திற்காக மனதில் வைத்துக்கொண்டு தசாவதாரம் என்று கூறிவருகிறோம். பொதுவாக ஸ்ரீமன்நாராயணனுடைய அவதாரங்களை சிலையில் வடிவமைத்து தினமும் முறைப்படி திருவாராதனம் உத்ஸவங்களைச் செய்து வருகிறோம். இவ்வாறு எம்பெருமானை அர்ச்சிப்பதால் இவ்வுலகத்திற்கு நன்மை கிடைக்கிறது. இந்த எம்பெருமானை ஸேவிப்பவர்களுக்கு அவர்களுடைய பாபங்கள் அழிந்து சௌகர்யமாக இவ்வுலகில் அனைத்து க்ஷேமாதிகளையும் அடைகின்றனர்.

ஸ்ரீமன்நாராயணனை ஆலயங்களில் ஸ்ரீவைகானஸ முறைப்படி அர்ச்சிப்பதற்கு மந்த்ரங்கள் மிகவும் முக்கியமாகும். ஸ்ரீவைகானஸத்தில் மந்த்ரமில்லாமல் எந்த க்ரியையும் கிடையாது. ஒவ்வொரு வேத மந்த்ரமும் அதனுடைய உட்பொருளை முக்கியமாகக் கொண்டு அந்தந்த க்ரியைக்கு ஏற்றவாறு மந்த்ரங்களை ஸ்ரீமத் விகனஸர் ப்ரயோகம் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மந்த்ரங்களை குருவின் மூலம் அத்யயனம் செய்வது மிகவும் முக்கியமாகும். (ச்ரவணம் மனனம் குருமுக மூலம்). பொதுவாக வேதமந்த்ரங்களை குருவின் மூலம் தான் அத்யயனம் செய்யவேண்டும். இதனடிப்படையில் அடியேன் நடார் ஸ்ரீ.உ.வே. கோபாலபட்டாச்சாரியாரின் குமாரர் ஸ்ரீவைகானஸ ஆகமவித்வான், ஸ்ரீவைகானஸ ஆகம குலபதி:, ஸ்ரீவைகானஸ ஞானபாஸ்கரர் ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீனிவாஸபட்டாச்சாரியார் ஸ்வாமியிடம் சிஷ்யனாக இருந்துகொண்டு ஸ்ரீவைகானஸ மந்த்ரங்களை அத்யயனம் செய்தேன். என்னுடைய குரு ஸ்ரீவைகானஸ ஸமூஹத்தினருக்கும் மற்றும் அனைத்து மக்களுக்கும் மிகவும் சௌலப்யமானவர். இவர் எனக்கு குருவாகக் கிடைத்தது என்னுடைய பெரும்பாக்யமாகும்.

குரும் ப்ரகாசயேத் தீமான் மந்த்ரம் யத்னேன கோபயேத்
அப்ரகாசப்ரகாசாப்யாம் க்ஷீயேதே ஸம்பதாயுஷீ

குருவை ப்ரகாசம் செய்யவேண்டும். மந்த்ரத்தை மனனம் செய்து ரஹஸ்யமாக வைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு மாறாக மந்த்ரத்தை வெளிப்படுத்தியும், தன் குருவைப்பற்றி யாரிடமும் சொல்லாமலும் இருந்தால் அவனுடைய செல்வமும் ஆயுளும் அழிந்துவிடும் என்று ஸ்வாமி தேசிகன் கூறியிருக்கிறார். அடியேனுடைய குரு ஸ்ரீமான் ஸ்ரீ உ வே ந.கோ.ஸ்ரீனிவாஸபட்டாச்சாரியாருக்கு மற்றொருப் பெயர் ஸ்ரீ.ராஜம் பட்டாச்சாரியார். அனேகமாக அவரை ஸ்ரீனிவாஸபட்டாச்சாரியார் என்றே அழைப்பர். இவரைப் பற்றிய சரித்திரத்தை ஸ்ரீவைகானஸ விஜயத்தில் 2002 வருடம்

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009 Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

அக்டோபர் மாத இதழில் சங்கேந்தி ஸ்ரீமான் ஸ்ரீ உ வே டாக்டர். முத்து பட்டாச்சாரியார் மூலம் எழுதி அனைத்து நம்குல ஸ்வாமிகளுக்கும் தெரிவித்தோம். அதனைத் தொடர்ந்து தற்சமயம் நடார் ஸ்வாமி அவதரித்து 100 ஆண்டுகள் ஆகியுள்ளதால் அவருடைய சதமான ஜயந்தியைக் கொண்டாடவேண்டும் என்று இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளோம். ஸ்வாமி நம்மிடையே இல்லை என்றாலும் அவருடைய அனுக்ரஹம் நம்முடைய ஸமூஹத்திற்கு இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

ஸ்வாமியினுடைய அனுக்ரஹத்தால் தான் அடியேன் எம்பெருமானுக்கு குறைவின்றி கைங்கர்யங்களை தமிழகத்தில் செய்தேன். அவருடைய அனுக்ரஹத்தால் தான் ஸ்ரீவைகானஸ ஆகமரத்னம், ஸ்ரீவைகானஸ ஆகம ஆசார்யர், ஸ்ரீவைகானஸ யசோ பூஷணம் போன்ற பட்டங்களைப் பெற்று தென் கிழக்கு ஆசியா சிங்கபூரில் ப்ரதான அர்ச்சகராகவும், லண்டன், மலேசியா, மயன்மார், பிப்பைன்ஸ், இந்தோனேஷியா போன்ற இடங்களுக்கும் சென்று நம்முடைய அர்ச்சா சாஸ்த்ரத்தைதின்படி ஸ்ரீமன்நாராயணனுக்கு உத்ஸவங்களையும் மஹாஸம்ப்ரோக்ஷணாதிகளையும் செய்துகொண்டிருக்கிறேன். தினமும் அவரை மனதில் த்யானம் செய்தபிறகே என்னுடைய வேலைகள் துவங்கும். அவர் என்னுடைய மனதில் ஒவ்வொரு க்ஷணமும் குடிகொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் இல்லையென்றால் நான் இல்லை. அடியேனுடைய ஸ்வாமிக்கு சதமான மஹோத்ஸவத்தை செய்யவேண்டும் என சிங்கப்பூரில் ஸ்ரீனிவாஸப்பெருமாளிடம் ப்ரார்த்தனை செய்தேன். எம்பெருமானும் ஒப்பியப்பன்கோவில் ஸ்ரீ.உ.வே. பி.வி.கிருஷ்ணபட்டாச்சாரியார் சங்கேந்தி டாக்டர் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீ.முத்து பட்டாச்சாரியார். தஞ்சாவூர் டாக்டர் ஸ்ரீ.உ.வே.சுதர்ஷன் பட்டாச்சாரியார், அல்லூர் ஸ்ரீ.உ.வே. ஏ.எஸ். வெங்கட்ராம பட்டாச்சாரியார் போன்ற என்னுடைய ப்ரியஸகாக்கள் மூலம் என்னுடைய ப்ரார்த்தனையை பூர்த்தி செய்துள்ளார்.

இவ்வுத்ஸவத்தை சிறப்பான முறையில் ஏற்பாடுகளைச் செய்து பத்திரிக்கையை அச்சிட்டு திருமண மண்டபத்தையும் ஏற்பாடு செய்து அனைவருக்கும் ததீயாராதனம் நினைவுப் பரிசு போன்றவற்றை அனைவருக்கும் வழங்கிய என்னுடைய ஒப்பியப்பன்கோவில் ஸ்ரீமான் ஸ்ரீ உ வே பி.வி.கிருஷ்ணபட்டாச்சாரியார் ஸ்வாமிக்கும் அவருடைய ஸஹதர்மினீ திருமதி ஜானகி கிருஷ்ணபட்டாச்சாரியார் (அம்மங்காருக்கும்) என்னுடைய தன்யவாதங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு வந்து ஆதரவு தந்த அனைத்து நம்குல ஸ்வாமிகளுக்கும் குறிப்பாக நம்குல ஸ்வாமிகளுக்கு கௌரவபட்டத்தை வழங்கிய ஆனதாண்டவபுரம் ஸ்ரீமான் மந்த்ரஸிம்மம் ஸ்ரீ.உ.வே.ஆர்.கோதண்டராம பட்டாச்சாரியார் ஸ்வாமிக்கும் எனது தன்யவாதங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் சதமான ஜயந்தி மஹோத்ஸவத்தின் கமிட்டியினருக்கும் என்னுடைய தன்யவாதங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாஸன்
வி. ஸ்ரீனிவாஸபட்டாச்சாரியார்
சிங்கபூர்